# ஹொரவப்பொத்தானை பிரதேச சபை

## அனுராதபுரம் மாவட்டம்

### 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 யூன் 26 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 மே 21 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 திசெம்பர் 11 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஹொரவப்பொத்தானை பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் விசாரணையில் காணப்படுகின்ற இரண்டு வழக்குகளுக்குரிய செலுத்த வேண்டிய வழக்குக் கட்டணம் ரூபா 75,000 தொகைக்காக கணக்குகளில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது உள்ளூராட்சித் திணைக்களத்திடமிருந்து கிடைத்த ரூபா 237,320 தொகையான நூலகப் புத்தகங்களின் பெறுமதி மற்றும் சபையினால் நிர்மாணிக்கப்பட்ட 03 கட்டிடங்களின் கூட்டுக்கிரயமான ரூபா 6,150,563 தொகை என்பன நிலையான சொத்தாக நிதிக்கூற்றுக்களுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களைச் சமா்ப்பிக்கும் போது உரிய நிலையான சொத்துக்களின் பெறுமதி ரூபா 1,192,255 தொகை குறைவாகவும் ரூபா 5,630,272 தொகை அதிகமாகவும் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் வேலைக் கடன்கொடுத்தோர் ரூபா 5,731,525 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் நிலுவையாக இருந்த ஆதனவரியாக ரூபா 229,899 தொகை காண்பிக்கப்பட்டிருந்ததுடன் பட்டோலைகளின் பிரகாரம் அந்த மீதி ரூபா 215,875 ஆனமையால் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 14,024 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமா்ப்பிக்கப்படாமையால் ரூபா 48,013,359 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமா்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 882,218 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 80,070 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

பின்வரும் நிதிக்கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதி இல. 163 இன் பிரகாரம் ஆண்டின் வருமானத்தைக் கணிப்பிடுவதற்காக பொழிப்பு வருமானப் பதிவேடு (பி.ச.19) தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதி இல. 180 இன் பிரகாரம் நிதி அல்லது களஞ்சியத்திற்குப் பொறுப்பாகச் செயற்படுகின்ற உத்தியோகத்தர் அல்லது வருமானம் தொடர்பான கடமைகளை நிறைவேற்றுகின்ற உத்தியோகத்தர்களினால் பிணை வைப்பு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) களஞ்சிய வழங்கலுக்காக கொடுப்பனவு செய்யும் போது உரிய பொருட்கள் உடன்படிக்கையின் பிரகாரம் குறிப்பிட்ட தரத்தில் களஞ்சியத்திற்கு கிடைத்தமைக்கு களஞ்சியப் பொறுப்பு உத்தியோகத்தரினால் வழங்கப்பட வேண்டிய சான்றிதழ் 54 சந்தர்ப்பங்களின் போது ரூபா 882,102 கூட்டுத்தொகையான பொருள் கொள்வனவிற்காக வழங்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 1,150 | 389 | 991 |
| (ii) | வாடகை | 3,446 | 1,813 | 3,635 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 2,130 | 462 | 2,738 |
| (iv) | ஏனைய வருமானம் | 10,348 | 6,566 | 3,782 |

### 2.3.2 வாடகை

(அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 159(i) ஆம் பிரிவின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான 21 கடைகளிலிருந்து அறவிடவேண்டிய ரூபா 905,430 தொகையான நிலுவை கடை வாடகையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்குரிய 04 வியாபார நிலையங்களை மீளாய்வாண்டில் வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் ரூபா 409,433 தொகையான வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

(இ) உள்ளூராட்சி ஆணையாளரின் 1994 ஆகஸ்ட் 04 ஆந் திகதிய என்சீபீ/பீஎல்/4/7/19 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான கடைகள் 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்யப்பட்டு வாடகை திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.3.3 ஏனைய வருமானம்

04 வருமான விடயங்களுக்குரிய ரூபா 3,781,701 தொகையான நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 159(i) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.4 வியாபார வரி

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 149 ஆம் பிரிவின் பிரகாரம் வியாபார முயற்சிகளிலிருந்து அறவிடப்படுகின்ற கட்டணம் திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.3.5 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 82,469 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 640,700 |

**2.4 செயற்பாடற்ற மற்றும் குறைவான பயன்பாடுடைய பௌதீக வளங்கள்**

வடமத்திய மாகாண பிரதம அமைச்சிலிருந்து 2008 ஆண்டின் போது கிடைத்த ரூபா 1,064,000 பெறுமதியான அரிசி மாவை அண்மித்த பேக்கிரி உற்பத்தித் தொகுதிகள், 02 கைடெக்ரர்கள் மற்றும் 02 கப் வாகனங்கள் என்பன பாவனைக்கு எடுக்கப்படாது செயற்பாடற்றுக் காணப்பட்டது.

**2.5 போதியளவான அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 132(ஓ) ஆம் பிரிவின் பிரகாரம் சமூக ஏற்றுக்கொள்ளல்களுக்காக செய்யப்பட்ட ரூபா 78,380 கூட்டுத்தொகையான செலவினத்திற்காக விடயப்பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

**2.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

சபைக்குச் சொந்தமான கப் வாகனம் 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 327,950 தொகை செலவிடப்பட்டு பழுதுபார்க்கப்பட்டு ஒரு வருடம் கடப்பதற்கு முன்னர் உடைந்திருந்ததுடன் உத்தரவாதச் சான்றிதழ் பெறப்படாமையினால் பழுதை திருத்தமுடியாமல் ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்டு, வாடகை அடிப்படையில் பெற்ற வாகனத்திற்கு மீளாய்வாண்டின் போது ரூபா 312,400 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**2.7 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) எதிர்வரும் வருடங்களின் செயற்பாடுகளுக்குரிய திட்டங்களை உள்ளடக்கி கூட்டிணைந்த திட்டமும் அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கான செயல்நடவடிக்கைத் திட்டமும் தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையில் சேவையாற்றி இடம்மாற்றலாகிச் சென்ற, சேவையை விட்டுச் சென்ற மற்றும் ஓய்வு பெற்ற 10 ஊழியர்களிடமிருந்து அறவிட வேண்டிய 10 வருடங்களை விட பழமையான ரூபா 79,526 கூட்டுத்தொகையான கடனை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 19(1)(i) ஆம் பிரிவின் ஏற்பாடுகளைப் பின்பற்றப்படாமல் 13 பதவிகளுக்காக பதவியணியினர் சேர்க்கப்பட்டு ரூபா 1,522,576 தொகை சம்பளமாக சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) 03 வருடங்களைவிட பழைய செலுத்த வேண்டிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 804,469 இனைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) நீண்ட காலம் தொடக்கம் அறவிடுவதற்குள்ள ரூபா 116,033 தொகையான கடன்பட்டோர் மீதியை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.8 நிறுவனத்திற்கு எதிராக ஆரம்பிக்கப்பட்டு சட்ட விடயங்கள்

(அ) செயற்திட்டத்திற்குரிய உடன்படிக்கையின் பிரகாரம் சபையினால் கொடுப்பனவு செய்யப்படாமையினால் வெளி நிறுவனத்தினால் சபைக்கு எதிராக நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்குத் தீர்ப்பின் அடிப்படையில் சபை ரூபா 325,121 தொகை மற்றும் அதற்குரிய சட்டப்படியான வட்டி என்பவற்றைச் செலுத்த வேண்டியிருந்தது.

(ஆ) வெளிநபர் ஒருவரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட வைப்புப் பணம் சபையினால் உடன்படிக்கையின் பிரகாரம் மீளச் செலுத்தப்படாமையினால் அந்நபர் சபைக்கு எதிராக ரூபா 401,700 தொகை நட்டஈடு கோரி நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்திருந்தார்.

## 2.9 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

மீளாய்வாண்டின் போது பிரதேச சபையினால் சுற்றாடலை அழகுபடுத்தும் கழிவுப் பொருள் முகாமைத்துவ வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) உள்ளகக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(உ) ஒப்பந்த நிருவாகம்